# TNPSC தேர்வுகளுக்கான நடப்பு நிகழ்வுகள் – நவம்பர் 2015

## தமிழகம்

- கச்சத்தீவை இலங்கைக்கு வழங்கக் காரணமான ஒப்பந்தங்கள் செய்யப்பட்ட வருடங்கள் - 1974, 1976
- சென்னையை மையமாகக் கொண்ட **கிரீன்பீஸ் இந்தியா** அமைப்பின் பதிவை ரத்து செய்து தமிழக அரசு பிறப்பித்த உத்தரவுக்கு சென்னை உயர் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை இடைக்கால தடை விதித்தது.
- உலகில் முதன் முதலாக ஸ்ரீரங்கப்பட்டணத்தில் (இந்தியா) இருந்துதான் **ராக்கெட்** ஏவப்பட்டதாக **விஞ்ஞானி சிவதாணுப் பிள்ளை** தெரிவித்துள்ளார்.
- நாகையை அடுத்த நாகூர் கடற்கரையில் உள்ள சில்லடி தர்காவின் **கந்தூரி விழா சந்தனக் கூடு ஊர்வலம், சந்தனம் பூசும் விழா** 22-11-2015 இரவு நடைபெற்றன.
- பெண்களுக்கு திருமண நிதியுதவியுடன் **தாலிக்கு 4 கிராம் தங்கம்** வழங்கும் திட்டத்தை **முதல்வர் ஜெயலலிதா இல் தொடக்கி வைத்த ஆண்டு** - 2011.
- **உதயமார்த்தாண்டபுரம் சரணாலயம்** அமைந்துள்ள இடம் - திருத்துறைப்பூண்டி
- **கிரானைட் முறைகேடு** தொடர்பாக, சட்ட ஆணையர் சகாயம் மேற்கொண்ட விசாரணையின் அறிக்கையை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.
- .தஞ்சாவூர் மாவட்டத்தில் நடத்தப்பட்ட தமிழக முதல்வரின் சிறந்த மின் ஆளுமை விருதுக்கானப் போட்டியில் **சாஸ்த்ரா பல்கலைக்கழகம்** முதல் பரிசு பெற்றது.
- உடல் உறுப்பு தானம் மற்றும் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை ஆகியவற்றில் **நாட்டிலேயே சிறந்த மாநிலத்துக்கான விருது**

www.tnpscportal.in

தமிழகத்திற்கு வழங்கப்பட்டது. தேசிய உடல் உறுப்பு மற்றும் திசு மாற்று நிறுவனம் (நோட்டோ) சார்பில் ஆறாவது இந்திய உடல் உறுப்பு தானம் நாள் விழா தில்லி விஞ்ஞான் பவனில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சியில் உடல் உறுப்பு தானம் மற்றும் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சையில் சிறந்து விளங்கும் மாநிலத்திற்கான விருதை மத்திய அமைச்சர் ஜே.பி. நட்டா, **தமிழக அரசின் மக்கள் நல்வாழ்த் துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கரிடம்** வழங்கிப் பாராட்டினார்.

- **பிரித்திகா யாஷினி** எனும் சேலம் மாவட்டத்தை சார்ந்த திருநங்கை **நாட்டிலேயே முதல் முறையாக காவல் துறையில் சப் இன்ஸ்பெக்டர்** தேர்வில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
- சென்னைக்கு குடிநீர் தரும் **வீராணம் ஏரி** கடலூர் மாவட்டத்தில்ள்ளது.
- **தமிழ்நாட்டில் குழந்தைகள் பாலின விகிதம் 946 லிருந்து 943 ஆக குறைந்துள்ளது.** குழந்தைகள் பாலின விகிடம் என்பது 0 முதல் 6 வரையிலான 1000 ஆண் குழந்தைகளுக்கு எத்தனை பெண்குழந்தைகள் என்ற வீதமாகும். முன்னதாக 2001 ஆம் சென்சஸ் படி 942 ஆகவும் 2011 சென்சஸ் படி 946 ஆகவும் இருந்தது.
- தமிழ்நாட்டில் கருவிலிருக்கும் குழந்தையின் பாலினத்தை அறிவதை தடை செய்யும் சட்டம் **1994** ஆம் ஆண்டு இயற்றப்பட்டது.
- India Skills Report 2016 அறிக்கையின் படி **பெண்கள் பணிபுரிவதற்கு உகந்த மாநிலமாக தமிழ்நாடு அறிவிக்கப்பட்டுள்ளது**.
- **"அதியமான்' பெயருடன் சங்க கால நாணயம்**:நாணயவியல் நிபுணர் இரா.கிருஷ்ணமூர்த்தி கண்டுபிடிப்பு. "அதியமான்' பெயர் பொறித்த கி.மு. 3-ஆம் நூற்றாண்டு கால நாணயத்தை "தினமலர்' ஆசிரியரும், தென்னிந்திய நாணயவியல் கழகத் தலைவருமான இரா.கிருஷ்ணமூர்த்தி கண்டறிந்து விளக்கங்களை அளித்துள்ளார். கடந்த ஆகஸ்ட் மாதம் "மாறன்' பெயருடைய சங்ககால நாணயத்தைக் கண்டறிந்தார். இந்த நாணயத்தின் காலம், கி.மு., 3-ஆம் நூற்றாண்டு.

சங்ககால குறுநில மன்னன் அதியமான் நெடுமான் அஞ்சி. அவனது ஊர் தகடூர். அதன் இப் போதைய பெயர் **தருமபுரி.** அவ்வையாருக்கு நெல்லிக்கனியை அளித்த அவன், மழவர் இனத்தைச் சேர்ந்தவன். அவனது முன்னோர், முற்றிலும் நீரால் சூழப்பட்ட பகுதி யில் இருந்து வந்ததாகக் கருதப் படுகின்றனர்.

- **தமிழகத்தில் தனிநபர் கடன் சுமை** : தமிழ்நாட்டில் பொருளாதார நிலை, கடன் சுமை குறித்து இந்தியா ஸ்பெண்ட் என்ற பொருளாதார இதழ் விவரங்களை வெளியிட்டுள்ளது. 2010-11 முதல் 2014-15-ஆம் ஆண்டு வரையிலான 5 ஆண்டுகளில் இந்தியாவிலுள்ள பெரிய மாநிலங்களின் கடன் அளவு, பொருளாதாரச் செயல்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. ரூ.3.38 லட்சம் கோடி கடன் வைத்து, **அதிக கடன் வைத்திருக்கும் மாநிலமாக மகாராஷ்டிரம் உள்ளது.** ஆனால், மகாராஷ்டிரம், தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களுமே தனிநபர் கடன் சுமையை ஒரே அளவில் வைத்திருக்கின்றன.

- **தமிழ் மொழிபெயர்ப்பு நூல்கள் டெல்லியில் வெளியீடு** : இந்திய மொழிகளுக்காக 'சமன்வாய்' அமைப்பு நடத்தும் 5-வது ஆண்டு விழா டெல்லியில் நடந்தது. காலச்சுவடு பதிப்பகத்தின் 3 மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியிடப்பட்டன. 3 நூல்களும் மூல மொழியில் இருந்து நேரடி யாக மொழியாக்கம் செய்யப் பட்டவை. முதல் நூல், ஊடகவியலாள ரும், அரசியல் விமர்சகருமான **சபா நக்வியின் In Good Faith** என்ற நூலின் மொழியாக்கமான **'வாழும் நல்லிணக்கம்'. முடவன்குட்டி முகமது அலி** மொழியாக்கம் செய்துள்ளார். **மோ யான் சீன மொழியில் எழுதிய 'சேஞ்ச்'** என்ற குறுநாவல், **பயணியால் தமிழில் 'மாற்றம்' என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது**. மூன்றாவது நூல் ஒரு கவிதைத் தொகுப்பு. திஹார் சிறையின் பெண் கைதிகள் எழுதிய கவிதைகளை **வர்த்திகா நந்தாவும், விம்லா மெஹ்ராவும் தொகுத்து 'திங்க்கா திங்க்கா திஹார்'** என்ற தலைப்பில் இந்தியில் வெளியிட்ட நூலின்

மொழியாக்கம். **தமிழில் 'துயர் நடுவே வாழ்வு' என்ற பெயரில் எம்.கோபாலகிருஷ்ணனால் மொழியாக்கம் செய்யப்பட்டுள் ளது.**

- கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 11-ஆவது துணைவேந்தராக **கு.ராமசாமி** மீண்டும் தேர்வு செய்யப்பட்டார்.
- பிரபல ஆன்மிக பாடகர் **பித்துக்குளி முருகதாஸ்**(95) உடல் நலக்குறைவால் காலமானார்.
- **மலேசிய எழுத்தாளர் பெ.இராஜேந்திரனுக்கு கரிகாற்சோழன் விருது வழங்கப்பட்டுள்ளது**.சிங்கப்பூர் முஸ்தபா தமிழ் அறக்கட்டளை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சிங்கப்பூர் தமிழறிஞர் கோ.சாரங்கபாணி ஆய்விருக்கையை நிறுவியுள்ளது. இதன் சார்பில், சிங்கப்பூர், மலேசிய எழுத்தாளர்களின் சிறந்த நூலுக்கு ஆண்டுதோறும் "கரிகாற் சோழன் விருது' வழங்கப்படுகிறது. 2014-ஆம் ஆண்டுக்கான விருதுக்கு மலேசிய தமிழ் எழுத்தாளர் பெ. ராஜேந்திரன் எழுதிய "பண்பின் சிகரம் பத்மா', சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் ஷாநவாஸ் எழுதிய "அயல் பசி' ஆகிய நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.
- சென்னை உயர் நீதிமன்ற பாதுகாப்புப் பணியை மத்திய தொழிலகப் பாதுகாப்புப் படையினர் (சி.ஐ.எஸ்.எ.ஃப்) நவம்பர் 16 முதல் துவங்கினர்.
- உலகத் தமிழ் ஆய்வு மன்றத்தின் தலைவராக 1989-ஆம் ஆண்டு முதல் 2010 வரை பணியாற்றிய **நொபுரு கரஷிமா** தனது 82-ஆவது வயதில் ஜப்பானில், 26 நவம்பர் 2015 அன்று மறைந்தார். நொபொரு கராஷிமா 1995 ல் தஞ்சாவூரில் நடைபெற்ற 8 வது உலகத்தமிழ் மாநாட்டை முன்னின்று நடத்தியவர். இவர் 2010ல் கோயம்புத்தூரில் நடைபெற்ற 9வது உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை புறக்கணித்தார். 2013ஆம் ஆண்டு இவருக்கு பத்மசிறீ விருது வழங்கப்பட்டது.

## இந்தியா

- பிகார் மாநில முதல்வராக, ஐக்கிய ஜனதா தளக் கட்சியின் (ஜேடியு) மூத்த தலைவர் நிதீஷ் குமார் ஐந்தாவது முறையாக மீண்டும் பதவியேற்றார். இவர், கடந்த 2000 ஆண்டில் தான் முதல் முறையாக பீகாரின் முதல்வராக பொறுப்பேற்றார்.

- **சமஸ்கிருத மொழிக்கான தேசிய குழுவை** முன்னாள் இந்திய தலைமைத்தேர்தல் ஆணையரான, **என்.கோபாலசுவாமி** தலைமையில் மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சரவை அமைத்துள்ளது.

- மகாராஷ்டிர அரசினால் வாங்கப்பட்ட லண்டனில் காணப்படும் **அம்பேத்கர் நினைவு இல்லத்தை** பிரதமர் மோடி அவர்கள் திறந்து வைத்தார்.

- **தேசிய பயோ மெடிக்கல் ஆராய்ச்சி அமைப்பை** (Bio-medical Research (NARF))தெலுங்கானா மாநிலத்திலுள்ள ஹைதராபாத்தில் அமைப்பதற்கு மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

- 2000 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட, கிராமப்புறங்களை சாலைகள் மூலம் இணைப்பதற்கான, ' **பிரதம மந்திரி கிராம் சதக் யோஜனா**' வின் இலக்கு 2022 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டிற்கு குறைக்கப்பட்டுள்ளது.

- அணு ஆயுதங்களை தாங்கும் வலிமையுடைய **தனுஷ் ஏவுகணை** ஒடிஷாவின் பூரி கடற்கரைப்பகுதியில் சுபத்ரா போர்க்கப்பலிலிருந்து வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.

- சிறுபான்மையினரின் இட ஒதுக்கீட்டுக்காக அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் - **சச்சார்**

- சூடான் நாட்டின் அதிபர் **ஓமர் அல் பசீர்** அவர்கள் இந்தியாவிற்கு வருகைபுரிந்துள்ளார்கள்.

- **நாகாலாந்தின் தேசிய சோசலிஸ்ட்கவுன்சில் (கப்லாங்)** (NSCN (K)) அமைப்பு தீவிரவாத இயக்கமாக மத்திய அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- **மன்பிரீத் வோக்ரா** - இந்தியாவுக்கான ஆப்கானிஸ்தான் தூதுவர்.
- இராஜஸ்தானின் ஜெய்சால்மர் பகுதியிலுள்ள **இந்திய-பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் நாட்டிலேயே முதல் முறையாக , சூரிய சக்தியில் இயங்கும் விளக்குகள்** பொருத்தப்பட்டுள்ளன.
- ஹரியானா மாநிலத்தின் **பசுவதை சட்ட மசோதாவிற்கு** குடியரசுத்தலைவர் கையப்பமிட்டுள்ளார்.
- ரெட் கிராஸ் அமைப்பின் , இந்தியாவின் செக்ரட்டரி ஜெனரலாக இருந்த **டாக்டர்.சத்ய பால் அகர்வால்** காலமானார்.
- **வடகிழக்கு இந்தியாவின் முதல் யானைகளுக்கான சிறப்பு மருத்துவமனை** அஸ்ஸாமிலுள்ள காசிரங்கா தேசிய பூங்காவில் அமைக்கப்பட்டுள்ளது.
- **டி.கே.விஷ்வநாதன்** தலைமையிலான **வங்கிகடன் திவால் சட்டங்கள் (Committee on Bankruptcy Law Reforms) பற்றிய குழு** தனது அறிக்கையை 4-11-2015 அன்று சமர்ப்பித்தது.
- **ஃபோர்ப்ஸ் பத்திரிக்கையின் 'உலகின் வலிமை வாய்ந்த மக்கள் 2015" பட்டியலில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி 9 வது இடத்திலுள்ளார்.** முதல் இடத்தில், ரஷிய அதிபர் விளாடிமிர் புடின், இரண்டாவது இடத்தில் ஜெர்மன் சான்சலர் ஏஞ்செலா மெர்கல் மற்றும் மூன்றாம் இடத்தில் ஒபாமா ஆகியோர் உள்ளனர்.
- **2005 ஆம் ஆண்டிற்கு முன்னர் தந்தையை இழந்த பெண்கள், அவர்கள் மூதாதையர் சொத்தில் பங்கு கேட்க இயலாது** என உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்து வாரிசுரிமை (சட்டத்திருத்த) சட்டம் 2005 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

- **இரண்டாவது உலக பேரிடர் மேலாண்மை மாநாடு** ஆந்திர பிரதேச மாநிலம், விஷாகப்பட்டினத்தில் நடைபெற்றது.

- **இந்திய இராணுவ சிறப்பு அதிகாரம் வழங்கும் சட்டம்** (Armed Forces Special Powers Act) இயற்றப்பட்ட ஆண்டு -1958

- நவம்பர் 15 , 2015 லிருந்து மத்திய அரசின் தூய்மை இந்தியா திட்டத்திற்காக **0.5 % சேவை வரி** நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

- மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் **இந்தியா-ஏசியான்- கிழக்கு ஆசியா நாடுகளின் உச்சி மாநாடு** நடைபெற்றது.

- **மைரோசாப்ட் நிறுவனம்** தனது டிஜிட்டல் இந்தியா திட்டத்திற்கான தனது முன்னோட்ட ஆய்வை நடத்த **வாரணாசி** நகரை தெரிவு செய்துள்ளது.

- **பிரம்மோஸ் ஏவுகணை** (BrahMos Missile) **இந்தியா மற்றும் ரஷிய** நாடுகளின் கூட்டிணைவால் தயாரிக்கப்பட்டதாகும். இந்த ஏவுகணையின் பெயரானது இந்தியாவின் பிரம்மபுத்திரா ஆறு மற்றும் ரஷியாவின் மோஸ்கா ஆறு ஆகியவைகளின் பெயர்களை இணைத்து உருவானதாகும்.

- **இந்திய அரசின் தங்க முதலீட்டு திட்டம்** : தங்கத்தை நேரடியாக வாங்காமல், அதன் மீது முதலீடு செய்து பணம் ஈட்டும் வகையிலான மூன்று திட்டங்களை பிரதமர் நரேந்திர மோடி 05-11-2015 அன்று தொடக்கி வைத்தார்.
    - **1.தங்க சேமிப்புத் திட்டம் ( Gold Monetisation Scheme ):** தங்க சேமிப்புத் திட்டத்தின் கீழ், தங்க நகைகளை வங்கியில் குறைந்தது ஓராண்டிலிருந்து 15 ஆண்டுகள் வரை முதலீடு செய்யலாம். குறைந்தபட்சம் 30 கிராம் தங்க நகைகளை முதலீடு செய்ய வேண்டும். தங்கத்தின் மதிப்பைப் பொருத்து ஆண்டுக்கு 2.5 சதவீதம் வட்டி வழங்கப்படும். முதிர்வுக் காலத்தில்,

வட்டியை பணமாகவோ அல்லது தங்கமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

- **2.தங்கப் பத்திர முதலீட்டுத் திட்டம் (Sovereign Gold Bond Scheme) :** இந்தத் திட்டத்தின்படி, தங்கத்தை நகையாகவோ அல்லது கட்டிகளாகவோ வாங்குவதற்குப் பதிலாக, அதன் மதிப்பிற்கேற்ப பத்திரங்களில் முதலீடு செய்ய வேண்டும். குறைந்தபட்சம் 2 கிராம் முதல் அதிகபட்சம் 500 கிராம் வரையிலான மதிப்புடைய தங்கப் பத்திரங்களில் முதலீடு செய்யலாம். பத்திரங்களில் முதலீடு செய்பவர்களுக்கு அதன் மதிப்புக்கேற்ப 2.75 சதவீதம் வட்டி வழங்கப்படும்.இந்தத் திட்டத்தின் முதிர்வுக் காலம் 8 ஆண்டுகளாகும். குறைந்தது 5 ஆண்டுகளாவது தங்கப் பத்திரத்தில் முதலீடு செய்திருந்தால் மட்டுமே வட்டி கிடைக்கும்.

- **3. தங்க நாணயம் (Indian Gold Coin):** இந்தியாவிலேயே முதல்முறையாக அசோகச் சக்கரம் பொறிக்கப்பட்ட தங்க நாணயத்தையும் பிரதமர் மோடி வெளியிட்டார். இந்த நாணயத்தின் ஒருபுறம் அசோக சக்கரமும், மற்றொருபுறம் மகாத்மா காந்தியின் உருவப்படமும் பொறிக்கப்பட்டுள்ளன. முதல்கட்டமாக, 5 மற்றும் 10 கிராம் எடையுள்ள தங்க நாணயங்களை விற்பனைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர, 20 கிராம் எடைகொண்ட தங்கக் கட்டிகளும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. மத்திய அரசின் கனிம வர்த்தக நிறுவனத்தின் (எம்எம்டிசி) 125 கிளைகளில் இந்த நாணயங்களும், தங்கக் கட்டிகளும் கிடைக்கும். ***(நன்றி : தினமணி)***

- **'நூறு மேள திருவிழா'** கொண்டாடப்படும் மாநிலம் - மேகாலயா

- **மிளகு வர்த்தகம் தொடர்பான 43-ஆவது சர்வதேச மாநாடு மைசூரில்** நவ. 22-ஆம் தேதி நடைபெற்றது. 1972-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வரும் சர்வதேச மிளகு அமைப்பின் தலைமையகம்,இந்தோனேசியா தலைநகர் ஜகர்தாவில் உள்ளது. அந்த அமைப்பின் தற்போதைய

தலைவராகப் பொறுப்பு வகித்து வருபவர், **இந்திய வாசனைப் பொருள்கள் வாரியத்தின் தலைவரான ஏ.ஜெயதிலக்.**

- ❖ **'Rebooting India: Realizing a Billion Aspirations'** என்ற புத்தகத்தின் ஆசிரியர் - நந்தன் நீலகேனி
- ❖ தில்லியில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவுள்ள குடியரசு தின விழாக் கொண்டாட்ட நிகழ்ச்சியில், **பிரான்ஸ் அதிபர் ஃபிரான்சுவா ஹொலாந்த்** சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள இருக்கிறார்.தில்லியில் கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற இந்த ஆண்டுக்கான குடியரசு தின விழாவில் அமெரிக்க அதிபர் ஒபாமா தனது மனைவி மிஷெலுடன் கலந்து கொண்டார்.
- ❖ **புகழ்பெற்ற குழந்தைகள் புத்தக ஆசிரியர் கமலா லக்ஷ்மண்** அவர்கள் நவம்பர் 14 அன்று காலமானார். இவர், டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகையில் புகழ்பெற்ற, 'சாமானிய மனிதன் கார்ட்டூனை' உருவாக்கிய ஆர்.எல்.லக்ஸ்மண் அவர்களின் மனைவியாவார்.
- ❖ **சமீபத்தில் செய்திகளில் வந்த போர்க்கப்பல்கள் பற்றி,**
  - ○ **ஐ,என்.எஸ் கொச்சி (INS Kochi)** - உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட போர்க்கப்பல். கடந்த செப்டம்பர் 30 ல் இந்திய கடற்படையுடன் இணைக்கப்பட்டது.
  - ○ **ஐ,என்.எஸ் விக்ரமாதித்யா(INS Vikramaditya)** - இந்த விமானம் தாங்கி போர்க்கப்பலானது, 1987 ஆம் ஆண்டில் ரஷியாவால் தயாரிக்கப்பட்டு 'பாகு' (Baku) எனும் பெயரில் அந்த நாட்டு கடற்படையில் இணைக்கப்பட்டது. பின்னர் அட்மிரல் கோர்ஷ்கோ எனும் பெயரில் மாற்றியமைக்கப்பட்டு, 1995 ஆம் ஆண்டு இந்தியாவிற்கு வழங்கப்பட்டது. நம் நாட்டில், ஐ,என்.எஸ் விக்ரமாதித்யா எனும் பெயரில் செயல்பட்டுவருகிறது.
  - ○ **ஐ.என்.எஸ் விஸ்வகர்மா (INS Vishwakarma)** - முன்னாள் கடற்படை பயிற்சி கப்பலாக இருந்த இப்போர்க்கப்பல், நவம்பர்

2015 ல் கடற்படை தளபதி அட்மிரல், ஆர்.கே.தவான் அவர்களால், இந்திய கடற்படையுடன் இணைக்கப்பட்டது.

- கொழும்பில் நடைபெற்ற சர்வதேச கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான முக்கிய முடிவுகளை விவாதிக்கும் "**காலி (சர்வதேச கடல்சார் பாதுகாப்பு மாநாடு)** 2015' மாநாட்டில் இந்திய கடற்படை தலைமைத் தளபதி **அட்மிரல் ஆர்.கே. தோவான்** தலைமையில் உயர்நிலைக் குழு பங்குபெற்றது.

- **வைகால்ப் (Vikalp) திட்டம்** - இந்திய இரயில்வேயினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய திட்டமாகும். இதன்படி காத்திருப்பு பட்டியலில் உள்ள பயணிகளுக்கு பிற இரயில்களில் ஒதுக்கீடு செய்யப்படும்.

- பிரதமர் மோடியின் கனவுத் திட்டமான **"தூய்மை இந்தியா' திட்டச் செயலர் விஜய லஷ்மி ஜோஷி**, சனிக்கிழமை விருப்ப ஓய்வு பெற்றார்.இதையடுத்து, "தூய்மை இந்தியா' திட்டச் செயலாளர் பொறுப்பை, ஊரக வளர்ச்சித் துறை செயலாளர் **ஜுகல் கிஷோர் மொஹாபாத்ரா** கூடுதலாக கவனிப்பார்.

- **ஏ.பி.ஜெ.அப்துல்கலாம் அம்ருட் யோஜனா** - கருவுற்றிருக்கும் மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு சத்துணவு வழங்கும் மகாராஷ்டிரா அரசின் திட்டம்.

- **உஜ்வால் டிஸ்காம் யோஜனா** - நலிவுற்றிருக்கும் மின் வினியோக நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கான மத்திய அரசின் திட்டமாகும்.

- மருத்துவத் துறையில் நவீன தொழில்நுட்பத்துக்கான **ஐ.நா.வின் உயர்நிலைக் குழு**வில் இந்திய விஞ்ஞானியான **சிப்லா நிறுவனத் தலைவர் யூசுப் ஹமீது** இடம் பெற்றுள்ளார்.உயிர் காக்கும் மருந்துகளைத் தயாரித்ததோடு, உயிர்க்கொல்லியான எய்ட்ஸக்கு உலகிலேயே மிகக் குறைந்த விலையில் மருந்துத் தயாரித்த முதல் நிறுவனம் சிப்லா ஆகும்.

- **IMPRINT India என்பதன் விரிவாக்கம்** - Impacting Research Innovation and Technology. இது, நாட்டில் அறிவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சியை மேம்படுத்தும்வகையில் குடியரசுத்தலைவர் பிரணாப் முகர்ஜி அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

- சுதந்திர இந்தியாவின் சிறந்த அகழ்வாராய்ச்சி நிபுணரான வீரேந்திர நாத் மிஷ்ரா காலமானார்.

- உலகின் மிகப்பெரிய மோட்டார் சைக்கிள் நிறுவனமான ஹீரோகோண்டா (Hero MotoCorp) நிறுவனத்தின் நிறுவன **பிரிஜ்மோகன் லால் மஞ்சு காலமானார்.**

- நிதியரசர் **ஏ.கே.மாத்தூர்** தலைமையிலான **ஏழாவது ஊதியக்குழு** மத்திய அரசு ஊழியர்களுக்கு 23.55 சதவீத ஊதிய உயர்வை பரிந்துரை செய்துள்ளது. இதற்கு முன்னர் 2006 ஆம் ஆண்டின் 6 **வது ஊதியக்குழு**வின் தலைவராக இருந்தவர் **பி.என்.ஸ்ரீகிருஷ்ணா** .

- விஸ்வ இந்து பரிஷத் தலைவர் **அசோக் சிங்கால்** காலமானார்.

- இந்திய தேர்தல்களில் புகைப்பட அடையாள அட்டையை அறிமுகம் செய்த முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் **ராம கிருஷ்ண திரிவேதி** காலமானார்

- வங்கிகளின் செயல்பாடுகளை மறுசீரமைப்பதற்காக, **"இந்திரதனுஷ்'** திட்டம் கடந்த ஆகஸ்ட் மாதம் தொடங்கப்பட்டது.

- **தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை**, நிகழ் நிதியாண்டுக்குள் நடைமுறைப்படுத்துவதாக கேரளம், குஜராத் உள்ளிட்ட 14 மாநில அரசுகள் உறுதியளித்துள்ளன என்று மத்திய உணவுத் துறை அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வான் தெரிவித்தார்.ஹரியாணா, ராஜஸ்தான் உள்ளிட்ட 22 **மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில்** உணவுப் பாதுகாப்புச் சட்டம் ஏற்கெனவே அமலில் உள்ளது. ஆந்திரம், சிக்கிம் ஆகிய மாநிலங்கள் அடுத்த மாதத்திலும், உத்தரப் பிரதேசம், மேகாலயம், ஜம்மு-காஷ்மீர், அந்தமான்-நிக்கோபார் ஆகிய மாநில

அரசுகள், வரும் ஜனவரி மாதத்திலிருந்தும் இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதாகத் தெரிவித்துள்ளன.

- அணு ஆயுதங்களைத் தாங்கிச் சென்று இலக்கை தாக்கும் திறனுடைய, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட **தனுஷ் ஏவுகணை** இன்று ஒடிசா கடற்கரைப் பகுதியில் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.சுமார் 500 கிலோ எடைகொண்ட அணு ஆயுதங்களைத் தாங்கிச் சென்று 350 கிலோமீட்டர் தொலைவில் உள்ள இலக்கைத் தாக்கும் வகையில் தனுஷ் ஏவுகணை வடிவமைக்கப்பட்டது

- அணு உலைகளின் மூலம் மின்சாரம் தயாரிக்க பெரிதும் உதவும் **யுரேனியத்தை கனடாவில் இருந்து** அடுத்த மாதம் முதல் இந்தியா பெற உள்ளது.முதல் முறையாக 250 டன் கனடா யுரேனியம் இந்தியாவுக்கு கிடைக்கக் உள்ளது.

- **பிஹார் மாநிலத்தில்** அடுத்த ஆண்டு ஏப்ரல் 1-ம் தேதி முதல் **மது விலக்கு** அமல்படுத்தப்படும் என்று அந்த மாநில முதல்வர் நிதிஷ் குமார் அறிவித்துள்ளார்.

- **7வது ஊதியக் குழு** தன் அறிக்கையை 19.11.2015-ல் மத்திய நிதியமைச்சரிடம் வழங்கியது.

- 350 கி.மீ. தூரம் பாய்ந்து சென்று எதிரி இலக்கை அழிக்கும் **அணுஆயுதங்களை ஏந்தி செல்லும் பிருத்வி-2 ஏவுகணை** சோதனை வெற்றி பெற் றுள்ளது.

- **நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் 26-11-2015** அன்று தொடங்கியது. டிசம்பர் 23-ம் தேதி நடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத் தொடரின் சிறப்பு அம்சமாக, **"தாள்கள் இல்லா அலுவல்' (பேப்பர்லெஸ் ஆஃபிஸ்)** முழு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

- **மும்பை குண்டு வெடிப்பு நடைபெற்ற நாள் -** 2008-ம் ஆண்டு நவம்பர் 26-ம் தேதி

- 2015 அறிக்கையின் படி, 2014 ஆம் ஆண்டு நாட்டில் **மொத்த ஜிடிபியில் 6.1 சதவீதம் மொபைல் துறை** பங்களித்துள்ளது. அதாவது மொத்த பொருளாதாரத்தில் ரூ. 7.7 லட்சம் கோடி பங்களித்துள்ளது இந்த பங்கு 2020-ல் இரண்டு மடங்கு உயர்ந்து ரூ. 14 லட்சம் கோடியாக இருக்கும் என ஜிஎஸ்எம்ஏ-ன் ஆசிய தலைவர் **அலாஸ்டேர் கிராண்ட்** தெரிவித்துள்ளார்.

- இந்தியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனமும் (டிஆர்டிஓ), இஸ்ரேலிய விண்வெளி நிறுவனமும் இணைந்து **வடிவமைத்த "பராக்-8' ரக ஏவுகணையின் சோதனை, ஜெருசலேமில்** 27-11-2015 அன்று, வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

- **'ஆபரேஷன் குபேரா' திட்டம்** - கேரள அரசினால் கந்துவட்டி வசூ லில் ஈடுபடுவோரைப் பிடிக்க எடுக்கப்படும் நடவடிக்கை.

- **அணு ஆயுதங்களை ஏந்தி செல்லும் வல்லமை படைத்த இந்தியாவின் அதிநவீன அக்னி -1 ஏவுகணை** ஒடிஸா மாநிலம் அப்துல் கலாம் தீவில் உள்ள ஒருங் கிணைக்கப்பட்ட ஏவுகணை பரிசோதனை மையத்தில் இருந்து 27-11-2015 அன்று, வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது. நிலத்தில் இருந்து நிலத்தில் உள்ள இலக்கு களை துல்லியமாக தாக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த ஏவுகணை 700 கி.மீ, அப்பால் உள்ள இலக்குகளையும் தாக்கும் வல்லமை படைத்தது. அக்னி- 1 ஏவுகணை 12 டன் எடை கொண்டது.

- இந்திய வரலாற்று ஆய்வு கவுன்சில் (ஐசிஹெச்ஆர்) தலைவர் **ஒய். சுதர்சன் ராவ்** தனது பதவியிலிருந்து ராஜினாமா செய்துள்ளார்.

- சர்வதேச வங்கியான **ஹெச்எஸ் பிசி**, இந்தியாவில் தனியார் வங்கிச் சேவை பிரிவினை மூடுவதாக அறிவித்துள்ளது.

- இந்திய ராணுவ ரகசியம் தொடர் பான முக்கிய ஆவணங்களுடன் பதுங்கி இருந்த பாகிஸ்தான் உளவாளி முகமது இஜாஸ் என்கிற முகமது கலாம் ஐஎஸ்ஐ உளவாளியை உத்தரப் பிரதேச மாநிலத்தில் சிறப்பு அதிரடிப் படையினர் சுற்றி வளைத்து கைது செய்தனர்.

- ‘பெடல்’ **செய்வதன் மூலம் மின் சாரம் உற்பத்தி செய்யும் நிலையான மிதிவண்டி சாதனத்தை** அமெரிக்க வாழ் இந்திய தொழிலதிபரும் கொடையாளருமான **மனோஜ் பர்கவா** அறிமுகம் செய்துள்ளார்.

- பொலாரிஸ் நிறுவனத்தின் நிறுவனர் அருண் ஜெயின் மற்றும் அந்த நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரி ஆர்.காந்த் ஆகியோர் **உள்பேர வர்த்தக த்தில் ஈடுபட்ட குற்றத்துக்காக** 2 கோடி ரூபாயை அபராதம் விதித்திருக்கிறது செபி.

- இந்தியக் கடலோரப் **பாதுகாப்புக்கு சி-422 என்ற ரோந்துக் கப்பல்** கடலோரக் காவல் படை கிழக்குப் பிராந்திய அமைப்பு மூலம் காரைக்கால் மார்க் துறைமுக வளாகத்தில் நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது.

- சென்னை மற்றும் குஜராத்தின் அகமதாபாத் நகரங்களில் மெட்ரோ ரயில் திட்டத்தை நிறை வேற்றுவதற்கு வசதியாக ரூ.5,479 கோடி **கடனுதவி வழங்க ஜப்பான் முன்வந்துள்ளது.**

- இந்திய ராணுவ தலைமை தளபதி **தல்பீர் சிங் சுஹாக்** 4 நாட்கள் பயணமாக 29-11-2015 அன்று, இலங்கை தலைநகர் கொழும்புக்கு சென்றார்.

- **முத்ரா திட்டம்** : கடந்த ஏப்ரல் மாதம் சிறிய தொழில் முனைவோர்கள் எளிதில் கடன் பெறுவதற்காக பிரதான் மந்திரி முத்ரா யோஜனாவை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். தற்போது இந்த திட்டத்தின் கீழ் 24 லட்சம் பெண்கள் உட்பட 66 லட்சம் பேர் தொழில் தொடங்கு வதற்காக கடன் பெற்று பயனடைந் துள்ளதாக பிரதமர் மோடி தெரி வித்துள்ளார்.

- **"சாத்தானின் கவிதைகள்'** நாவலுக்கு மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் ஆட்சிக்காலத்தில் தடை விதிக்கப்பட்டது தவறு என்று மத்திய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

- **பிரபல புரவியாட்டக் கலைஞர் டி.சி.சுந்தரமூர்த்தி** உடல் நலக்குறைவால் பெங்களூரில் ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
- **நிழலுலக தாதா சோட்டா ராஜன்** இந்தோனேசியாவில் பாலித் தீவில் வைத்து கைது செய்யப்பட்டார்.
- **தூய்மை இந்தியா** திட்டத்திற்காக மத்திய அரசு **சேவை வரியை ½ சதவீதம் உயர்த்தியுள்ளது.**
- வங்காளதேச சிறையில் அடைக்கப்பட்டிருந்த உல்ஃபா தீவிரவாத இயக்கத்தலைவர் அனூப் சேத்தியா இந்தியாவில் ஒப்படைக்கப்பட்டார்.
- இந்தியாவில் சில்லறை வர்த்தகத்தில், ஆன்லைன் வர்த்தகம் ஒரு சதவீதம் மட்டும்தான் என கார்ட்னெர் நிறுவன ஆராய்ச்சி தெரிவிக்கிறது.

## சர்வதேச நிகழ்வுகள்

- சிங்கப்பூர் அதிபர் **டோனி - டான் கெங்க்**
- **ஆசியாவின் பொருளாதாரச் சிங்கம் என சிங்கப்பூர்** நாட்டை, பிரதமர் மோடி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.
- **சபாலா புயல்** (Cyclone Chapala) தாக்கிய நாடு - ஏமன்
- **ஆசிய-பசிபிக் பொருளாதார கூட்டமைப்பின் (Asia-Pacific Economic Cooperation (APEC)) கூடுகை** நவம்பர் 18 முதல் 19 வரை, பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர் மணிலாவில் நடைபெற்றது.
- **மாலத்தீவு** அதிபர் அப்துல்லா யாமீன் அந்நாட்டில் தேசிய பாதுகாப்பிற்கான **அவசர நிலை பிரகடனம்** செய்துள்ளார்.
- இலங்கையில் தமிழர் பகுதிகளில் **மாவீரர் தினத்தை கொண்டாட அந்த நாட்டு அரசு தடை விதித் துள்ளது.** இலங்கை உள்நாட்டுப் போரின் போது உயிரிழந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில்

விடுதலைப் புலிகள் சார்பில் ஆண்டுதோறும் **நவம்பர் 27-ம்** தேதி மாவீரர் தினம் கொண்டாடப் பட்டது.

- ரஷிய நாட்டின் போர் விமானத்தை சுட்டு வீழ்த்தியதற்காக **துருக்கி மீது ரஷியா பொருளாதாரத் தடையை** விதித்துள்ளது.
- **சவுதி அரேபிய அரசு** முதல் முறையாக **பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையை** வழங்கியுள்ளது.
- உலக சுகதார அமைப்பு (WH0) **சியர்ரா லியோண் (Sierra Leone)** எனும் ஆப்பிரிக்க நாட்டை **எபோலா நோயற்ற நாடாக அறிவித்துள்ளது**.
- **ஆசியா பசிபிக் பொருளாதார கூட்டமைப்பு** 1989 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இதன் தலைமையிடம் ஹாங்காங்கில் உள்ளது. தற்போது 21 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தியா 2011 ஆம் ஆண்டு முதல் இவ்வமைப்பின் பார்வையாளராக மட்டும் இருந்து வருகிறது. சமீபத்தில் உறுப்பினராக விண்ணப்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது.
- **உலகிலேயே ஆரோக்கியமான நாடு** எனும் சிறப்பை சிங்கப்பூர் பெற்றுள்ளது. இந்த பட்டியலில் இந்தியா 103 வது இடத்திலுள்ளது.
- உலகத் தமிழாராய்ச்சி மையத்தின் முன்னாள் தலைவரும் **ஜப்பானியத் தமிழறிஞருமான நொபோரு கரஷிமா காலமானார்.**
- நவம்பர் 24-ஆம் தேதி ரஷிய போர் விமானத்தை சுட்டு வீழ்த்திய **துருக்கி நாட்டுக்கு பொருளாதாரத் தடை விதித்துள்ளது ரஷியா.**
- துருக்கி நாட்டின் அதிபர் - **எர்டோகன்**
- மியான்மரில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் சூகி கட்சி ஆட்சியை பிடித்துள்ளது.

## முக்கிய நியமனங்கள்

- **ஸ்வாதி தாண்டேகர்** (இந்தியா வம்சாவளி அமெரிக்கர்) - ஆசிய வளர்ச்சி வங்கியின் செயல் இயக்குநர். இது அமெரிக்கத் தூதருக்கு இணையான பொறுப்பாகும்.
- **ஜஸ்டின் டிரூடாயு** - கனடாவின் பிரதமர்
- **ஹர்ஜித் ஷஜன்** - கனடாவின் இராணுவ அமைச்சரான இந்திய வம்சாவளி சீக்கியர்
- **ரிசர்வ் வங்கி கவர்னர் ரகுராம் ராஜன்** - துணைத்தலைவர், Board of Directors, Bank for International Settlements
- **சையத் அக்பருதீன்** - ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி
- **டி.எஸ்.தாக்கூர்** - உச்ச நீதிமன்றத்தின் 43 வது தலைமை நீதிபதி
- **விஜய் கேஷவ் கோகலே** - சீனாவுக்கான இந்திய தூதுவர்.
- **ஹர்ஸ்வர்தன் நியோடியா** - தலைவர், FICCI (Federation of Indian Chambers of Commerce and Industry)
- **ஆண்டோனியோ கோஷ்டா** - போர்ச்சுக்கலின் பிரதமர்
- **பேட்ரிசியா ஸ்காட்லாந்து** - காமன்வெல்த்தின் புதிய செக்ரட்டரி ஜெனரல் ( காமன்வெல்த்தின் முதல் பெண் தலைவர் மற்றும் அப்பொறுப்பை வகிக்கும் முதல் பிரிட்டிஷ் நபர்)

## விருதுகள் / மரியாதைகள்

- இந்த ஆண்டுக்கான **இந்திரா காந்தி அமைதிப் பரிசுக்கு ஐ.நா. அகதிகள் உரிமை ஆணையம்** தேர்வு செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது உலப்போர் நடைபெற்றபோது இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவி செய்வதற்காக ஐ.நா. சபையால் அகதிகள் உரிமை ஆணையம் ஏற்படுத்தப்பட்டது.

- போர் ஊர்திகள் மற்றும் வளர்ச்சி நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் விஞ்ஞானி பாலகுருவுக்கு **சிறந்த விஞ்ஞானிக்கான விருது** வழங்கப்பட்டுள்ளது. ராணுவ அமைச்சர் மனோகர் பாரிக்கர் இந்த விருதை பாலகுருவுக்கு வழங்கினார்

- **சர்வதேச எல்லைகளற்ற பத்திரிக்கை நிருபர்கள் பரிசு 2015** (Reporters without Borders Prize) சிரிய பெண் பத்திர்க்கையாளர் **செய்னா எராகிம்** என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

- **ஆல் இந்திய ரேடியோவிற்கு சர்வதேச விருது** - குழந்தை தொழிலாளர்களைப்பற்றிய 'நிக்காம் இவர்க்கொப்பம்' எனும் நிகழ்ச்சிக்கு, 2015 ஆம் ஆண்டிற்கான ஆசியா - பசிபிக் ஒலிபரப்பு கூட்டமைப்பின் ( Asia Pacific Broadcasting Union (ABU) )விருதைப்பெற்றுள்ளது.

## முக்கிய தினங்கள்

- தேசிய சட்ட சேவைகள் தினம் - **நவம்பர் 9**

- அமைதி மற்றும் வளர்ச்சிக்கான உலக அறிவியல் தினம் - **நவம்பர் 10**

- சர்வதேச பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் ஒழித்தல் தினம் - **நவம்பர் 25**

- இந்தியாவில் வெண்மை புரட்சியை ஏற்படுத்திய வர்கீஸ் குரியன் பிறந்தநாள், தேசிய பால் தினம், தேசிய அரசியலமைப்பு நாள் - **நவம்பர் 26**

- 6-வது இந்திய உறுப்பு தான நாள் - **நவம்பர் 27**

- 2016 ஆண்டானது ஐக்கிய நாடுகளவையினால் **சர்வதேச பயிறுகளுக்கான ஆண்டாக (International Year of Pulses)** அறிவிக்கப்பட்டுள்ளது.

www.tnpscportal.in

## அறிவியல் தொழில்நுட்பம்

- தாவரங்களில் நடைபெறும் ஒளிச்சேர்க்கையின் மூலம் எதிர்காலத்தில் மின்சாரம் தயாரிக்க முடியும் என்று **ஸ்வீடன் நாட்டின் லிங்கோபிங் பல்கலைக்கழக விஞ்ஞானிகள்**, தெரிவித்துள்ளனர்.

- **உலகின் வெப்பமான ஆண்டாக 2015 ஆண்டை ஐக்கிய நாடுகள் சபை அறிவித்திருக்கிறது.**

- Tianhe-2 என்ற **சீனாவின் சூப்பர் கம்பியூட்டரானது** உலகின் மிகவும் வலிமைவாய்ந்த சூப்பர் கம்பியூட்டர் எனும் பெருமையை தக்கவைத்துள்ளது.

- **'ஜிசாட்-15' தொலைதொடர்பு செயற்கைக் கோள் 'ஏரியன்-5'** ராக்கெட் மூலம் நவம்பர் 10-ம் தேதி தென் அமெரிக்க கண்டத்தில் பிரான்ஸ் நாட்டுக்கு சொந்தமான பிரெஞ்சு கயானாவில் இருந்து விண்ணில் செலுத்தப்பட்டது. இந்த 'ஜிசாட் 15' செயற்கைக் கோளுடன் அரபு நாடுகளின் **'அராப்சாட் 6பி'** என்ற செயற்கைக் கோளும் விண்ணில் செலுத்தப்பட்டது. இது மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்க நாடுகளின் தொலைதொடர்பு, தொலைக்காட்சி ஒளிபரப்பு பணிக்காக பயன்படும். கடந்த 2003 ஏப்ரலில் ஏவப்பட்ட இன்சாட் 3ஏ செயற்கைக் கோளின் 12 ஆண்டுகால ஆயுட்காலம் சமீபத்தில் முடிவுக்கு வந்தது. 2007 மார்ச்சில் செலுத்தப்பட்ட இன்சாட் 4பி செயற்கைக் கோளில் சோலார் பேனல்கள் பாதிக்கப்பட்டதால், அதன் இயக்கம் பாதியாக குறைந்துள்ளது. இந்த இரண்டு செயற்கைக் கோள்களுக்கும் மாற்றாக இனி ஜிசாட்-15 செயல்படும். இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) 'ஜிசாட் 14' என்ற செயற்கைக் கோளை கடந்த ஆண்டு ஜனவரி மாதம் விண்ணில் ஏவியது குறிப்பிடத்தக்கது.

- EKS Kosmos-2510 எனும் இராணுவத்திற்கான செயற்கைக்கோளை ரஷ்யா விண்ணில் செலுத்தியது.

www.tnpscportal.in

- குளோனிங் மூலம் விலங்குகளை உருவாக்கும் **உலகிலேயே மிகப்பெரிய ஆய்வகம் சீனாவில்** உருவாக்கப்படவுள்ளது.

## விளையாட்டுகள்

- சிங்கப்பூரில் நடைபெற்ற உலக பெண்கள் டென்னிஸ் போட்டி இரட்டையர் பிரிவில், இந்தியாவின் சானியா மிர்சா - சுவிட்சர்லாந்தின் மார்ட்டினா ஹிங்கிஸ் இணை சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.
- சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் புதிய தலைவராக **ஷசாங் மனோகர்** நியமிக்கப்ப பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.
- குவைத்தில் நடைபெற்ற, 13 வது ஆசிய துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவைச்சார்ந்த **ஜிது ராய்** வெள்ளி பதக்கம் வென்றுள்ளார்.
- குவைத்தில் நடைபெற்ற, 13 வது ஆசிய துப்பாக்கி சுடும் போட்டியில் பெண்களுக்கான ஏர் பிஷ்டல் பிரிவில், இந்தியாவின் **ஹீனா சித்து** தங்க பதக்கம் வென்றுள்ளார்.
- எகிப்தின், ஹர்காடாவில் நடைபெற்ற ஸ்னூக்கர் சாம்பியன்சிப் போட்டியில் இந்தியாவின் **பங்கஜ் அத்வானி** சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.
- சீனா ஓப்பன் 2015 பேட்மிண்டன் போட்டியில், **சாய்னா நெய்வால்** அவர்கள் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.
- இந்திய குத்து சண்டை வீரர் **ஷிவ் தபா,** 56 கிலோ எடைப்பிரிவினருக்கான, சர்வதேச தரவரிசையில் இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.
- ஒலிம்பிக் போட்டியில் இந்திய வீரர்களை ஊக்குவிக்கும் விதமாக மத்திய அரசு ஏற்படுத்தியுள்ள **Target Olympic Podium Scheme (TOPS) அமைப்பின் தலைவராக** முன்னாள் உயரம் தாண்டுதல் சாம்பியன் **அஞ்சு ஜார்ஜ்** அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

www.tnpscportal.in

- **டேவிஸ் கோப்பை** 2015 ஐ இங்கிலாந்தின் **ஆண்டி முர்ரே** தலைமையிலான டென்னிஸ் விளையாட்டுக் குழு கைப்பற்றியுள்ளது.

- குவைத்தில் நடைபெற்ற ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் பெண்களுக்கான ஜீனியர் பிரிவு 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் **தமிழக வீராங்கனை ஸ்ரீநிவேதா** தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

- சர்வதேச பாட்மிண்டன் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார் இந்திய பாட்மிண்டன் வீரர் **அரவிந்த் பட்**

- ஹாங்காங் ஓபன் பாட்மிண்டன் போட்டியில் **ஸ்பெயினின் கரோலினா மரின்** சாம்பியன் பட்டம் வென்றார்.

- **ஏடிபி உலக டூர் பைனல்ஸ்** டென்னிஸ் தொடரில் நடப்பு சாம்பியனும், **உலகின் முதல் நிலை வீரருமான செர்பியாவின் நோவக் ஜோகோவிச்** சாம்பியன் பட்டம் வென்றார். ஏடிபி உலக டூர் பைனல்ஸ் போட்டியின் 46 ஆண்டுகால வரலாற்றில் தொடர்ச்சியாக 4 முறை சாம்பியன் பட்டம் வென்ற முதல் வீரர் என்ற சாதனையை ஜோகோவிச் படைத்துள்ளார்.

- **சிங்கப்பூர் பி.என்.பி பரிபாஸ் டென்னிஸ்** போட்டியில் இந்தியாவின் சானியா மிர்ஷா , சுவிட்சர்லாந்தின் மார்ட்டினா ஹிங்கிஸ் இணை வெற்றி பெற்றுள்ளது.

- **சென்னை ஓபன் டென்னிஸ் போட்டிகள்** 1997-ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் அடுத்த ஆண்டுக்கான சென்னை ஓபன் டென்னிஸ் போட்டிகள் வரும் ஜனவரி 4-ம் தேதி தொடங்குகிறது. 20-வது சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியில் விளையாடுவதற்கு **இந்தியாவின் யூகி பாம்ப்ரி** நேரடித் தகுதி பெற்றுள்ளார்.

- உலக ஹாக்கி லீக் பைனல்ஸ் போட்டி சத்தீஸ்கர் தலைநகர் ராய்ப்பூரில் 26-11-2015 அன்று துவங்கியது.

- 2015-ம் ஆண்டுக்கான **உலகின் சிறந்த தடகள வீரர்** விருதுக்கு அமெரிக்காவைச் சேர்ந்த டெகத்லான் வீரர் **ஆஷ்டன் ஈட்டனையும், சிறந்த வீராங்கனை** விருதுக்கு எத்தியோப்பியாவைச் சேர்ந்த **ஜென்ஸிபே டிபாபாவையும்** தேர்வு செய்துள்ளது சர்வதேச தடகள சம்மேளனம்.

- **2015-ல் அதிக விக்கெட்டுகளை எடுத்த வீரர் அஸ்வின்.** ஆடிய 8 டெஸ்ட் போட்டிகளில் 55 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இவருக்கு அடுத்த இடத்தில் இங்கிலாந்தின் பிராட் உள்ளார்.

- உலக ஹெவிவெயிட் குத்து சண்டை போட்டியில் கடந்த 11 ஆண்டுகளாக தோல்வியே காணாத உக்ரைன் வீரர் விளாடிமிர் கிளிட்ச்கோவை வீழ்த்தி இங்கிலாந்து வீரர் **டைசன் பியூரி சாம்பியன் பட்டத்தை வென்றார்.** உலக ஹெவிவெயிட் குத்து சண்டை போட்டி பெர்லின் நகரில் நடந்தது.

- சீனாவின் மக்காவ் நகரில் நடைபெற்ற மக்காவு ஓபன் பாட்மிண்டன் போட்டியில் **இந்திய வீராங்கனை பி.வி.சிந்து சாம்பியன் பட்டம்** வென்றார். இறுதி ஆட்டத்தில் பி.வி.சிந்து, ஜப்பானின் மினாட்சு மிடானியை 21 9, 21 23, 21 14 என்ற செட் கணக்கில் போராடி வீழ்த்தினார். மக்காவு ஓபன் பாட்மிண்டன் போட்டியில் சிந்து சாம்பியன் பட்டம் வெல்வது இது மூன்றாவது முறையாகும்.

- திருவாரூரில் நடைபெற்ற **53-ஆவது தேசிய பிரிமீயர் செஸ் போட்டியில் சென்னை வீரர் கார்த்திகேயன் முரளி சாம்பியன் பட்டம் வென்றார்.** இதன்மூலம் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பியாட் போட்டியில் விளையாட அவர் தகுதி பெற்றுள்ளார்.

- கொல்கத்தாவில் நடந்த 19 வயதுக்குள்பட்டோருக்கான (யு-19) முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டத்தில் 7 விக்கெட் வித்தியாசத்தில் வங்கதேசத்தை வீழ்த்தி கோப்பையை வென்றது இந்தியா.

**www.tnpscportal.in** இணையதளத்தில் போட்டித்தேர்வுகளுக்கான தினசரி நடப்பு நிகழ்வுகள் தொகுத்து வழங்கப்படுகின்றன.

**இந்த நடப்பு நிகழ்வுகள் பற்றிய உங்கள் கருத்துக்களை mail@tnpscportal.in ல் தெரிவியுங்கள்.**

**படியுங்கள் ! பகிருங்கள் ! வெற்றி பெற வாழ்த்துக்கள் !**

www.tnpscportal.in